# பொருளாதாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு

## விவசாயம் : ரயத்துவாரி முறை

### 1.1 பாரம்பரிய முறை

தொன்றுதொட்டு விவசாயம் (Agriculture) தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தின் ஆதார வளமாகவும், நில வருவாய் அரசாங்கத்தில் முதுகெலும்பாகவும் இருந்து வந்தது. விளைநிலம் சமுதாயத்தின் பொது சொத்தாகக் கருதப்பட்டது. தனி நபர் எவரும் பிறரது ஒப்புதலின்றி நிலத்தை வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது. இதற்கு விதிவிலக்காக தஞ்சை மாவட்டத்தில் ஏகபோகம் என்று அழைக்கப்பட்ட கிராம மிராசிமுறை நடைமுறையில் இருந்தது. இந்த முறையின் கீழ் மிராசுதாரர் குறிப்பிட்ட தொகையை அரசாங்கத்துக்கு நில வரியாகக் கொடுப்பார்; அதற்கு பதில் அரசாங்கம் கிராமங்களின் உள் விவகாரங்களில் தலையிடாது. மலபார் மாவட்டத்திலும், கொச்சின் பகுதியிலும் தனியுடைமை பெற நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்தது.

### 1.2. ஜமீன்தாரி முறை

தமிழ் நாட்டு நிர்வாகம் ஆங்கிலக் கம்பெனிக்கு மாறியபின் ஆங்கிலேயர் நடைமுறையில் இருந்த விவசாய-நிலவரி முறைகளையே பின்பற்றினர். நிலவரி வசூல் செய்வதற்காக நியமிக்கப்பட்ட இடைத்தரகர்கள் (Middlemen) விவசாயிகளை மனிதாபிமானமின்றி சகட்டுமேனியாகச் சுரண்டியதால் கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் பிரபு 1786 ஆம் ஆண்டு ஒரு வருவாய் மன்றத்தை (Board of Revenue) அறிமுகப்படுத்தினார். அவர் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய ஜமீன்தாரி முறை வெற்றிகரமாக செயல்பட்டதால் அதே முறையைத் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்து வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### 1.3. வட்ட ஓட்டைக்குள் சதுரக் கட்டை

1798 ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரல் வெல்லெ லி பிரபு வங்காள ஜமீன்தாரி முறையை தமிழ் நாட்டில் பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படி வங்காள **நிலையான**த் தீர்வுத் திட்டம் (Permanent Settlement) தமிழ் நாட்டில் திண்டுக்கல், பாரமகால் பகுதிகளிலும், வடக்கு சர்க்கார்'களிலும் (Northern Circars) அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி ஜமீன்தார்கள் நிலச் சொந்தக்காரர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்; அவர்கள் விவசாயிகளிடமிருந்து குத்தகைத் தொகையை 152 வசூலித்து, அதில் ஒரு பகுதியை அவர்கள்

கம்பெனிக்கு செலுத்த வேண்டும்; நிலத்தை **விற்கவோ, வாங்கவோ, அடமானம் வைக்கவோ ஜமீன்தாரர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர்.** வேறுவிதமாகக் கூறுவதாயின் ஜமீன்தாரர்கள் புதிய பாளை**யக்காரரர்களாயினர்!** புதிதாகப் புகுத்தப்பட்ட ஜமீன்தாரி முறை வட்ட ஓட்டைக்குள் சதுரக் கட்டையை நுழைத்தது போலாயிற்று! இந்த முறை தமிழ் நாட்டில் படுதோல்வி அடைந்தது.

1.4. கிராமத் தீர்வு முறை

தமிழ் நாட்டில் ஜமீன்தாரி முறை தோல்வி அடைந்ததால் கிராமத் தீர்வு முறை (Village Settlement Systems) ஆங்கிலக் கம்பெனி அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் 1804 முதல் 1814 வரை திருநெல்வேலி, கோயமுத்தூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டின் கீழ் நிலம் பிரதான விவசாயிகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது; அவர்கள் உழவர்களுக்கு மறு குத்தகைக்கு விட்டு விவசாயம் செய்தனர். இப்புதிய ப**ரிசோதனையும் வெற்றி பெறவில்லை. தமிழ் மண்ணில் வேற்றுத் திணைச் செடிகள் வளரவில்லை. எனவே, தமிழ் மண்ணுக்கேற்ற** செடியை உருவாக்கினார் சர் தாமன் மன்றோ (Sir Thomas Munro).

1.5. ரயத்வாரி முறை

தாமா மன்றோ தமிழ் நாட்டின் ஆளுநராக (1820-1827) இருந்த போது கம்பெனியின் ஜமீன்தாரி முறையையும், கிராமத் தீர்வு முறையையும் நிராகரித்துவிட்டு தமிழ் நாட்டின் தேவைக்கேற்ப ரயத்வாரி முறையை (Ryotwari System : ரயத் = உழவர்; வாரி = முறை) அறிமுகப்படுத்தினார். மன்றோ முறையின் சிறப்புக் கூறுகளாவன: 1) நிலத்தை உழுபவரே நிலத்துக்குச் சொந்தக்காரர். 'நிலம் உழுபவருக்கே சொந்தம்' என்ற புது புரட்சிகரமான விதி வகுக்கப்பட்டது. அதாவது, உழவரே விவசாயி. 2) விவசாயிக்கு அவரது நிலத்தை விற்கவோ அல்லது வாங்கவோ அதிகாரம் வழங்கப் பட்டது. 3) விவசாயி அவரது திறமைக்கும், தேவைக்கும் ஏற்ப எவ்வளவு நிலத்தை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அதாவது, விவசாயியின் நிலத்துக்கு உச்ச வரம்பு இல்லை . 4) நிலத் தீர்வை, இடைத்தரகர் இல்லாமல், விவசாயியுடன் நேரடியாக நிர்ணயிக்கப்பட்டது 5) நிலத் தீர்வை 20-30 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்யப்படும். 6) நிலவரித் தீர்வை சிறுகுறு விவசாயிகளுடன் முடிவு செய்யப்பட்டது. நிலச்சுவான்தார்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

'ரயத்வாரி முறையை உழவர் உடைமை முறை' எனக் கூறலாம். செயல் திட்டம் ரயத்வாரி முறை அல்லது உழவர் உடைமை முறையை

செயல்படுத்துவதற்கு முன்பு அறிவுப்பூர்வமான, நிறை முழுமையான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன: 1) நில அளவீடு (Survey). சென்னை ராஜதானி முழுவதும் பூகோள ரீதியாக அளவீடு செய்யப்பட்டது. குறிப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மொத்த நிலப்பரப்பு; அதன் எல்லை; அந்த எல்லைக்குட்பட்ட விளை நிலம், தரிசு நிலம், அரசு நிலம், நிலச் சொந்தக்காரர், பாசன நீர் வசதி போன்ற தகவல்கள் திரட்டப்பட்டு அளவீடு செய்யப்பட்டது. 2) பதிவேடுகள் (Registers). கிராமத்தைப் பற்றித்

153 திரட்டப்பட்ட தகவல்கள் பிரத்யேகப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டன. நிலத்தின் எண், நிலத்தின் எல்லை, உடைமையுரிமைக்காலம் (tennure), நிலத்தின் சொந்தக்காரர், நில மதிப்பு போன்ற விவரங்கள் இப்பதிவேடுகளில் குறிக்கப்பட்டன. இப்பதிவேடுகள் மாவட்டக் கச்சேரிகளில் (District Cutcheries) பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதாகக்

குறிப்பிட்டுள்ளார் கே.ராஜய்யன். 3) நிலப் பட்டா (Patta). நில அளவீடு முடிக்கப்பட்டு, பதிவேடுகள் தயாரானபின் உழவர் - விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டது. இப்பட்டாவில் உழவர் நிலம் பற்றிய தகவல்கள் அனைத்தும் தரப்பட்டன. நிலப்பட்டா நிலத் தீர்வு முறையைத் தெளிவுபடுத்தி, எளிமையாக்கிவிட்டது. 4) நிலத் தீர்வை (Land Assessment). நிலத் தீர்வை நிலத்தன்மை , உற்பத்தித் திறன் (Productivity), நில உரிமை, நிர்ணயிக்கப்பட்ட நிலவரி போன்ற விவரங்களை சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக குறிப்பிட்டது. உழவர் நிர்ணயிக்கப்பட்ட தீர்வைக்கு அதிகமாக செலுத்த வேண்டிய அவசியமில்லை ; அதிகாரிகளும் அவர்களிடமிருந்து அதிக வரியை வசூலிக்க முடியாது. இதன் மூலம் நிலத்தீர்வை எவரும் தவறாகப் புரிந்து கொள்ள முடியாதபடி மிகவும் தெளிவாக்கப்பட்டது. 5) வரைபடங்கள் (Field Maps). திரட்டப்பட்ட தகவல்களின்

அடிப்படையில் மாவட்ட, தாலுகா, கிராம வாரியான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரைபடங்கள் நிலங்களைப் பார்த்தறிந்து கொள்ளப் பயன்பட்டன. 6) நில அளவைத் துறை (Land Survey Department). மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தனியாக நில அளவைத் துறை உருவாக்கப்பட்டது. இத்துறையின் திறமையான செயல்பாட்டுக்குத் தேவையான அதிகாரிகளும், அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர். சுருங்கக்கூறின், தற்காலத் தமிழ் நாட்டில் முதல் முறையாக நில அளவை-தீர்வை அமைப்பு நன்கு சிந்தித்து, திட்டமிடப்பட்டு முறைப்படுத்தப்பட்டது.

1.6. விளைவுகள் நல் விளைவுகள்

ரயத்துவாரி அல்லது உழவர் உடைமை முறையால் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டன: 1) உழவர்கள் நிலச் சொந்தக்காரர்களாயினர். 'உழுபவருக்கே நிலம்' என்ற உயரிய கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுவரை கொத்தடிமைகளாக இருந்த விவசாய உழைப்பாளிகள் நிலத்துக்கு உரிமை உடையவர்களானார்கள். 2) உழவர் - விவசாயிகள் இடைத்தரகர்களின் மனிதாபிமானமற்ற சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அரசாங்கப் பாதுகாப்பு இருந்ததால் விவசாயிகள் அச்சமின்றி **சுதந்திரமாக செயல்படுவதற்கான வாய்**ப்பு ஏற்பட்டது. 3) இடைத்தரகர்கள் நீக்கப்பட்டதால் அரசாங்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. இதனால் விவசாயிகளின் மதிப்பு உயர்ந்தது; சமூக அந்த து பெற்றனர். 4) ரயத்துவாரி முறை மூலம் சொத்துரிமை ஒரு சிலரது கைகளில் குவிந்து விடாமல் பரவலாக்கப்பட்டது. 5) விவசாயிகள் தங்கள் நிலத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், உற்பத்தியைப் பெருக்கவும், ஏற்ற இறக்கமின்றி நிலத் தீர்வையைப் பணமாகக் கட்டுவதற்கும் வழி ஏற்பட்டது. 6) அரசாங்க அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று வந்ததால் நிலத்தைப் பற்றியும், நில உடைமையாளர்கள் பற்றியும், கிராமப் பழக்கவக்கங்கள் பற்றியும் நேரடியாக அறிந்து கொள்ள முடிந்தது.

### 1.7 **தீய விளைவுகள்**

ரயத்துவாரி முறை உழவர்-விவசாயிகளுக்கு சுவர்க்கத்தின் கதவைத் திறந்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மலையை எதிர்பார்த்தவர்களுக்கு மலை எலிதான் கிடைத்தது! நடைமுறையில் ரத்துவாரி முறையால் ஏற்பட்ட தீய விளைவுகள் வருமாறு: 1) புரட்சிகரமான இத்திட்டம் மன்றோ எதிர்பார்த்தபடி நிறைவேற்றப்படவில்லை. செயலாக்கக் குறைபாடுகள் ரயத்துவாரி திட்டத்தின் நோக்கத்தை பலவீனப்படுத்தி விட்டது. 2) துவக்கத்தில் நிலத் தீர்வை அதிகமாக இருந்ததால் விவசாயிகள் நிலவரியை செலுத்துவதில் சிரமம் இருந்தது. பின்னர் நிலத் தீர்வை குறைக்கப்பட்டாலும் விவசாயிகள் கடன் வாங்க வேண்டியிருந்தது. மேலும், விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், சாகுபடிச் செலவு, குடும்பச் செலவு போன்றவற்றுக்கு அரசாங்கம் கடன் வசதி செய்து தரவில்லை. 3) விவசாயிகள் நிலத்தை விற்கும் உரிமை பெற்றிருந்ததால் நெருக்கடி நேரத்தில் நிலத்தை அடகு வைக்கவோ அல்லது விற்கவோ செய்தனர். 4) நிலம் குத்தகைக்கும், மறு குத்தகைக்கும் விடப்பட்டதால் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 5) விவசாயிகளின் கடன் தேவைகளை நன்கு பயன்படுத்திக்கொண்ட இடைத்தரகர்களும், ஜமீன்தாரர்களும்

விவசாயிகளைக் கடனாளியாக்கி, கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் நிலத்தை அபகரித்துக் கொண்டனர்! 6) யாவற்றுக்கும் மேலாக, அரசாங்க அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, நிலத் தீர்வையில் முறைகேடுகள் செய்து, வரி வசூலிக்க மிருகத்தனமான முறைகளைக் கையாண்டனர். கிராமக் கர்ணம், தாசில்தார் போன்ற அரசாங்க அதிகாரிகள் ஊழலின் ஊற்றுக் கண்களாயினர். இவற்றோடு சேர்ந்து பஞ்சமும், தொற்று நோய்களும் விவசாயிகளின் நிலையை மோசமாக்கிவிட்டன.

1.7. மதிப்பீடு

நிலச் சீர்திருத்தம் சம்மந்தமாக பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி அறிமுகப்படுத்திய ஜமீன்தாரி, மகல்வாரி, ரயத்துவாரி ஆகிய மூன்று முறைகளில் தாம மன்றோ தமிழ் நாட்டில் செயல்படுத்திய ரயத்துவாரி முறையே சிறந்தது என்பதில் இருவேறு கருத்துகள் இல்லை. தொலைநோக்கோடு மேற்கொள்ளப்பட்ட புரட்சிகரமான விவசாயத் திட்டம் இது. ரயத்துவாரி முறை மன்றோ முறை', 'சென்னை முறை' என்றெல்லாம் பாராட்டப்பட்டது. மன்றோ, 'ரயத்துவாரி முறையின் தந்தை' என்று போற்றப்பட்டார். எனினும், மன்றோவுக்குப் பின் மன்றோவைப் போன்றவர்கள் தமிழ்நாட்டில் தோன்றாததால் புரட்சிகரமான திட்டம் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டது! செயலாக்கக் குறைபாடும், அதிகாரிகளின் ஊழலும், ஜமீர்தாரர்களின் பரம்பரைப் **பேராசையும் ர**யத்துவாரித் திட்டத்துக்கு அவப்பெயரை வாங்கிக் கொடுத்தது. இருப்பினும் தாம மன்றோ ஜமீன்தாரி முறைக்கு எதிரான ரயத்துவாரி முறையின் பிரதிநிதியாக நிலைத்து நிற்பதாகக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர். ரயத்துவாரி நிலத் தீர்வை முறை அரசாங்கத்துக்குத் திருப்தியளிப்பதாகவும், உழவர்களுக்கு நன்மை பயப்பதாகவும் இருந்ததாகக் கூறுகிறார் கே.ராஜய்யன்.

2.தொழில்கள்

கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் நூல் நூற்றலும், நெசவும் தமிழ் நாட்டின் முக்கிய தொழில்களாக இருந்தன. பெல்லாரியிலிருந்து வந்த பஞ்சு சென்னை ஜார்ஜ் டவுனில் பதப்படுத்தப்பட்டது. ராஜதானியின் பல பகுதிகளில் பஞ்சு பதப் பட்டறைகள் (Cotton Presses) துவக்கப்பட்டன. கோவை துணிகள் பிரபலமாக இருந்தன. கோவை தென்னிந்தியாவின் மான்செடர்' என்று அழைக்கப்பட்டது. நெல்லிக் குப்பத்திலும், கஞ்சத்திலும் சர்க்கரை ஆலைகள் துவக்கப்பட்டன. தெலுங்கு மாவட்டங்களில் புகையிலை அதிக அளவில் பயிரிடப்பட்டதால் சென்னை, திருச்சி, திண்டுக்கல்லில் சுருட்டு தொழில் (Cheroots) பிரபலமடைந்தது. சென்னையில் சாயத் தொழில் செழித்திருந்தது. அலுமினியம் இறக்குமதி

செய்யப்பட்டு, அலுமினியப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. உயர்ந்த ரகத் தோல் உற்பத்தி செய்யப்பட்டது. நீலகிரி மலைச்சரிவில் காப்பிப் பயிர் பிரபலமாயிற்று. கோவை, காலிக்கட், தெல்லிச்சேரி, மங்களூர் ஆகிய நகரங்களில் காப்பிப் பதனத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. தொழில், வர்த்தக வளர்ச்சிக்கேற்ப வங்கி வளர்ச்சியும் இருந்தது. 1683 ஜூன் 21 ஆம் தேதி சென்னை வங்கி (Madras Bank) துவக்கப்பட்டது. இந்த வங்கிதான் இந்தியாவிலேயே வெளிநாட்டு பாணியில் துவக்கப்பட்ட முதல் வங்கியாகும். இதன்பின் பிற வங்கிகளும், அவற்றின் கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி (Industrial Revolutions) ஏற்பட்ட பிறகு தமிழ் நாட்டுத் தொழில்களுக்கு, குறிப்பாக குடிசைத் தொழில்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது..

3.1 பாதைப் போக்குவரத்து

போக்குவரத்துப் பாதைகள் அடிப்படைத் தேவை. தமிழ் நாட்டில் மாட்டு வண்டிகள், ஜட்க்காக்கள், பல்லக்குகள் பிரதான போக்குவரத்து (Transport) சாதனங்களாக இருந்தன. 1845 இல் இருக்கும் பாதைகளைப் புதுப்பித்துப் பராமரிக்கவும், புதிய பாதைகளைப் போடுவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கென தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். சென்னை-பங்களூர்; சென்னை-திருச்சி; சென்னை கல்கத்தா; சென்னை - கடப்பா சாலைகள் பிரதான சாலைகளாகும். 1852 இல் பொதுப் பணித்துறை (Public Works Department) டல்ஹௌசி பிரபுவால் துவக்கப்பட்டது. 1855 இல் கிழக்கு கடற்கரை கால்வாய் (East Coast Canal) கட்டப்பட்டது. இது நீர்வழிப் / **போக்குவரத்தை அதிகரித்தது.**

3.2 ரயில் போக்குவரத்து

பாதைப் போக்குவரத்துக்கு இணையாக ரயில் போக்குவரத்தும் வளர்ந்தது. 1853 இல் சென்னை ரயில் கம்பெனி ராயபுரத்தில் தென்னிந்தியாவிலேயே முதல் புகைவண்டி நிலையத்தைக் கட்டியது. இதுவே அதன் தலைமையகமாகவும் இருந்தது. இங்கிலாந்தில் துவக்கப்பட்ட தென்னிந்திய ரயில் கம்பெனியின் தலைமையகம் திருச்சியில் ஆரம்பிக்கப்பட்டது. 1856 ஆம் ஆண்டு சென்னை-ஆர்க்காட்டுக்கு இடையே 156 முதல் ரயில் பாதை அமைக்கப்பட்டது. ரயில் போக்குவரத்து தற்காலத் தமிழ் நாட்டின் புதிய பொருளாதார சகாப்தத்தைத் துவக்கி வைத்தது எனலாம்.

3.3 நீர்வழிப் போக்குவரத்து

**பக்கிங்காம் கால்வாய்** பாதைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து போன்ற நீர்வழிப் **போக்குவரத்துக்கும் முக்கி**யத்துவம் அளிக்கப்பட்டது. 420 கி.மீ

நீளமுள்ள பக்கிங்காம் ஆறு (Buckingham Canal) நீர்வழிப் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. இந்த ஆறு விஜயவாடாவிலிருந்து விழுப்புரம் வரை சோழ மண்டலக் கட**ற்கரைக்கு இணையாகச்** சென்றது; செல்லும் வழியில் பல உப்பங்கழிகளை (Back-waters) சென்னை துறைமுகத்துடன் இணைத்தது. துவக்கத்தில் வடவாறு (North River) என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது.

1806 ஆம் ஆண்டு பக்கிங்காம் கால்வாய் வட சென்னையிலிருந்து எண்ணூர் வரை கட்டப்பட்டது. 1837 இல் இக்கால்வாய்க்கு சென்னை ராஜதானி அரசாங்கம் பொறுப்பேற்றது. அதன்பின் பக்கிங்காம் கால்வாய் 315 கிலோ மீட்டருக்கு வட சென்னையிலிருந்து விஜயவாடாவுக்கும், 103 கிலோ மீட்டர் தென் சென்னைக்கும் மரக்காணத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

1877-78 இல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தால் சென்னை பயங்கரமாகப் பாதிக்கப்பட்டது; **பல்லாயிரக்கணக்கானோர் வேலையின்றி துன்புற்றனர். அவர்களுக்கு** வேலை கொடுப்பதற்காக அடையாற்றைக் கூவம் ஆற்றோடு இணைத்து 8 கி.மீ தூரத்துக்கு ரூபாய் 3 மில்லியன் செலவில் வறட்சி நிவாரணப் பணியாக இணைத்துக் கட்டப்பட்டது. சென்னை ஆளுநர் பக்கிங்காம் கோமகன் (Duke of **Buckingham)** இத்திட்டத்துக்குக் காரணமாக இருந்தமையால் இதற்குப் பக்கிங்காம் கால்வாய் என்று பெயரிடப்பட்டது. கூவம் ஆறு (Cooum Canal) பக்கிங்காம் ஆற்றை வங்க விரிகுடா (Bay of Bengal)வுடன் இணைத்தது. கூவத்துக்கு வடக்கே இருந்த பக்கிங்காம் ஆறு வட பக்கிங்காம் ஆறு என்றும், கிழக்குப் பக்கத்தில் இருந்தது கிழக்கு பக்கிங்காம் ஆறு என்றும் அழைக்கப்பட்டது. இதில் 257 கி.மீ ஆந்திரா பகுதியிலும், 163 கி.மீ தமிழ் நாட்டிலும், 31 கி.மீ சென்னை நகர எல்லைக்குள்ளும் இந்த ஆறு ஓடிற்று. பக்கிங்காம் கால்வாய் வழியாக விஜயவாடாவிலிருந்து சென்னைக்குப் பொருட்களைக் கொண்டு வரவும், கொண்டு செல்லவும் பயன்பட்டது. இதன் மூலம் பக்கிங்காம் கால்வாய் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் முக்கிய நீர்வழிப் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. 1965-66இல் இக்கால்வாய்க்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. பக்கிங்காம் கால்வாய் புறக்கணிக்கப்பட்டது.

சென்னைத் துறைமுகம் (Madras Port) இந்தியாவில் பம்பாய்க்கு அடுத்தபடி இரண்டாவது பெரிய துறைமுகமாகும். இது ஒரு செயற்கைத் துறைமுகமாகும். சோழ மண்டலக் கடற்கரையின் பிரதான சென்னைத் துறைமுகத்தின் அலை தாங்கிகள் (Piers) 1861 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. சூறாவளிகளால் கட்டுமானப் பணி தாமதப்பட்டது. 1876 இல் மீண்டும் கட்டுமானப் பணி துவக்கப்பட்டது. கப்பல் துறைகள் (Quays or 157 Berths) பல கால கட்டங்களில் கட்டப்பட்டன. பிரிட்டிஷ் கடற்பயணக் கம்பெனி (British Navigation Company)க்குச் சொந்தமான சரக்குக்

கப்பல்கள் சென்னைத் **துறைமுகத்துக்கு வ**ந்தன. இதன் மூலம் ஆங்கிலக் கம்பெனி பம்பாய், கல்கத்தா, கொழும்பு, **ரங்கூன் போன்ற நகரங்களோ**டு நீர்வழி வர்த்தகத் தொடர்பு கொண்டது. தமிழ் நாட்டின் **கடல்வழி நுழைவாயிலா**ன (Gate Way of Tamil Nadu) சென்னைத் துறைமுகம் தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் திறவுகோலாகும். சென்னைக்கு அருகே உள்ள எண்ணூர் துறைமுகம் (Ennore Port) நிலக்கரி கொண்டு வருவதற்கான துணைக்கோள் துறைமுகமாக (Satellite Port)த் துவக்கப்பட்டு 1880 இல் விரிவுபடுத்தப்பட்டது. இத்துறைமுகம் தமிழ் நாடு மின்சார வாரியத்தின் (Tamil Nadu **Electricity Board) நி**லக்கரி தேவையைப் பூர்த்தி செய்கிறது. கூவம் ஆறு

கூவம் ஆறு சென்னைக்கு நடுவே சென்று வங்காள விரிகுடாவை அடைகின்றது. தமிழ் இலக்கியத்தில் கூவம் ஆற்றைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கூவலன் என்ற சொல் நிலத்தடி நீரைப் பற்றிய நிபுணரைக் குறிப்பிடுவதாக உள்ளது. 65 கி.மீ நீளமுள்ள கூவம் ஆற்றின் தோற்றுவாய் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூவம் கிராமம் என்று கருதப்படுகிறது. ஆரம்பத்தில் இந்த ஆறு மீன் பிடிக்கவும், படகுப் போட்டி நடத்தவும் பயன்பட்டது. பெரிதும் புறக்கணிக்கப்பட்ட கூவம் ஆறு புதுப்பிக்கப்பபட்டால் சென்னை நகருக்குள் நீர்வழிப் போக்குவரத்துக்கு நன்கு பயன்படும்.

4 .தொலைத் தொடர்பு

4.1 தபால் சேவை

தபால் சேவை (Postal Service) தகவல் தொடர்பு வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியது. 1712 ஆம் ஆண்டு சென்னை ஆளுநர் எட்வர்டு ஹாரிசன் (Edward Harrison) முதல் தபால் சேவையை சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குத் துவக்கி வைத்தார். 1786 ஜூன் முதல் தேதி முறைப்படுத்தப்பட்ட தபால் சேவை நடைமுறைக்கு வந்தது. அதே ஆண்டில் சென்னை பொது தபால் அலுவலகம் துவக்கப்பட்டது. ஆங்கிலக் கம்பெனியின் தபால் முறையைப் பற்றி ஆய்வு செய்த கமிஷனின் (1850) பரிந்துரையின்படி இந்தியா முழுதுக்கும் பொதுவான தபால் சேவை **மிகவும் குறைந்த விலையில்** விரிவுபடுத்தப்பட்டது. 1837 இல் சென்னை -பம்பாய்-கல்கத்தா **தபால் சேவைகள் ஒருங்கிணை**க்கப்பட்டு அகில இந்திய சேவை (All-India Service)யாக விரிவுபடுத்தப்பட்டது. 1854 அக்டோபர் முதல் தேதி முதல் அஞ்சல் தலைகள் (Postal Stamps) வெளியிடப்பட்டன.

4.2 தந்தி சேவை -

தபால் சேவையைப் போன்றே தந்தி (Telegraph) சேவையும் தகவல் தொடர்பில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. 1853 இல் தந்தி சேவை சென்னையைப் பிற உலக நாடுகளுடன் இணைத்தது. 1855 பிப்ரவரி முதல் தேதி உள்நாட்டு தந்தி சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. விரைவிலேயே தந்தித் தொடர்பு சென்னை , உதகை, பிற

158 **நகரங்களுக்கு**ம் விரிவுபடுத்தப்பட்டது. 1854 இல் இந்திய தந்தித் துறையின் கிளை **சென்னையில்** துவக்கப்பட்டது. சென்னை கல்கத்தா, பம்பாய் மற்றும் பெஷாவருடன் தந்தி மூலம் இணைக்கப்பட்டது. 1881 ஆம் ஆண்டு இந்தியாவில் தொலைபேசி அறிமுகப் படுத்தப்பட்டது. அதே ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி 17 கிளைகளுடன் முதல் தொலைபேசி பரிமாற்ற அலுவலகம் (Telephone Exchange) சென்னையில் துவக்கப்பட்டது. ரயில்வே, தபால் சேவை, தந்தி சேவை ஆகிய மூன்றும் மாபெரும் சமுதாய மாற்றத்துக்கான இயந்திரங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர்.

5 சாதனையாளர் : சர் தாமஸ் மன்றோ , 1761-1827

5.1 இளமைப் பருவம்

தாம மன்றோ 1761 ஜூலை 6 ஆம் தேதி காட்லாந்தில் உள்ள கிளா கோ நகரில் அலெக்சாண்டர் மன்றோ என்ற பணக்கார புகையிலை வியாபாரிக்கு மகனாகப் பிறந்தார். செல்வமும், செல்வாக்குமிக்க குடும்பத்தில் பிறந்த மன்றோ பள்ளிப் படிப்பின் போது படிப்பிலும், விளையாட்டுகளிலும், குறிப்பாக குத்துச் சண்டையில் சிறந்து விளங்கினார். நல்ல உடற்கட்டோடு வீரத்திலும், சமயோஜித புத்தியிலும் தனித்து நின்றார். பள்ளிப் படிப்பை முடித்தபின் கிளா கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கணிதத்திலும், வேதியலிலும் சிறப்புப் பயிற்சி பெற்றார். வரலாற்றையும், தத்துவத்தையும் விரும்பிப் படித்தார். பல மெய்விளக்க நூல்களைப் (Metaphysics) படிப்பதைவிட சில வரலாற்றுப் பக்கங்களைப் படித்தால் மனித மனதை சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்றார் மன்றோ .

5.2 சென்னையில் மன்றோ

அப் பல்கலைக் கழகப் படிப்பை முடித்த தாம மன்றோ 19 ஆம் வயதில் சென்னை **காலாட் படையில் வேலை கிடைத்ததால் சென்னை வந்தார்** (1780). ஐதர் அலிக்கு எதிரான இரண்டாவது ஆங்கில-மைசூர் போரில் (1780-1784) மன்றோ அவரது உறவினர் தளபதி ஹெக்டர் மன்றோவின் தலைமையில் (Major Sir Hector Munro) பங்கேற்றார். திப்பு சுல்தானுக்கு எதிரான மூன்றாம் மைசூர் போரிலும் (1790-1792) மன்றோ அவருடைய படைப் பிரிவுடன் போரிட்டார். மன்றோவின் வீரத்தையும், விவேகத்தையும் பற்றி அறிந்த கம்பெனி அவரைத் திப்புவிடமிருந்து

கைப்பற்றப்பட்ட சேலம் மாவட்ட பாராமகாலை **நிர்வகிக்கும் நான்கு நிர்வாகிகளில் ஒருவராக நியமித்தது.**

தாம மன்றோ பாராமகாலில் ஏழு ஆண்டுகள் (1792-99) பணியாற்றினார். அப்போது அவர் தமிழக மக்களோடு நெருங்கிப் பழகினார்; அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றி நன்கு அறிந்து கொண்டார். குறிப்பாக மன்றோ கிராமங்களுக்குச் சென்று பஞ்சாயத்து முறை பற்றிய தகவல்களைத் திரட்டினார். தமிழ் நாட்டின் பாரம்பரிய பஞ்சாயத்து ஆட்சி முறை மன்றோவின் மனதை வெகுவாகக் கவர்ந்தது. தமிழகத்தில் பின்பற்றப்பட்ட நிலப் பாகுபாடு, விவசாய முறை, நீர்ப்பாசன ஏற்பாடு, நிலத் தீர்வை பற்றியெல்லாம் நேரில் கண்டறிந்தார்.

5.3 பணிப் பயணம்

பர் திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பிறகு தாம மன்றோ கர்நாடகத்தில் இரண்டு ஆண்டுகள் (1799-1800) பணியாற்றி அங்கு பின்பற்றப்பட்ட விவசாய முறைகள் பற்றித் தெரிந்து கொண்டார். அதன்பின் அவர் ஐதராபாத்தில் நிசாம் கம்பெனியிடம் ஒப்படைத்த வட மாவட்டங்களின் ஆட்சியராக (District Collector) ஏழாண்டுகள் (1800-1807) பணிபுரிந்தார். அங்குள்ள நில மேலாண்மை பற்றி அறிந்து கொண்டார். அவருக்கு **விருப்பமான ரயத்துவாரி முறையைப்** பரிசோதனை செய்து பார்த்தார்.

5.4 இங்கிலாந்தில் மன்றோ

1807 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற தாம மன்றோ பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் பட்டயக் காலத்தை மேலும் நீட்டிக்கப்படுவதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு ஆக்கப்பூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். மன்றோவின் **அறிவாற்றலையும்,** அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய பிரிட்டிஷ் கம்பெனி இந்திய நீதித்துறையையும், காவல் துறையையும் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

5.5 பதவி உயர்வு

1814 ஆம் ஆண்டு இந்தியா திரும்பிய தாமஸ்மன்றோ இரண்டு ஆண்டுகள் (1814-1816) இந்திய நீதித்துறைக் கமிஷனின் (Judicial Commission) தலைமைப் பொறுப்பேற்று பல நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினார். அப்பதவிக் காலம் முடிந்தபின் மூன்றாவது மராத்தியப் போரில் (1817-1818) ஒரு படைப் பிரிவுக்குத் தலைமையேற்றுப் போரிட்டார்! தளபதி மன்றோவாகப் பதவி உயர்வு பெற்றார். இங்கிலாந்தில் அவருக்கு உயரிய வீர விருது (Knighthood) வழங்கப்பட்டது.

5.6 சென்னை ஆளுநர்

வீர விருது பெற்று இங்கிலாந்திலிருந்து திரும்பிய தாம மன்றோ சென்னை ஆளுநராக நியமிக்கப்பட்டார். மன்றோ சென்னை ஆளுநராக ஏழாண்டுகள் (1820 1827) பணியாற்றினார். அப்போது மன்றோ வங்காளத்தில் வெற்றி பெற்ற ஜமீன்தாரி முறையையும், பஞ்சாபில் வெற்றியடைந்த மகல்வாரி முறையையும் புறக்கணித்துவிட்டு தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்ற ரயத்துவாரி முறையை நடைமுறைப்படுத்துவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். அத்திட்டம் வெற்றிபெற அரும்பாடு பட்டார். அவரது சேவைக்காக மன்றோ 'ரயத்துவாரி முறையின் தந்தை' என்று பாராட்டப்பட்டார்.

தாமா மன்றோ சென்னை ஆளுநராக இந்த போது தமிழ் நாட்டு மக்களை **நேசித்தார்; தமிழக மக்களும் மன்றோவைத் தங்களில் ஒருவராகக் கரு**தி அவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். மன்றோ பிறப்பால் காட்லாந்து**க்காரராயினும் உள்ளத்தாலும் உணர்வாலும் தமிழராக**வே வாழ்ந்தார். மன்றோவின் ஆளுநர் ஆட்சிக் காலத்தை செ**ன்னை ராஜதானியி**ன் பொற்காலம் எனக் கூறலாம்.

5.7 இறந்தும் இறவா மன்றோ

**தாம மன்றோ சென்னை ராஜதானியின் ஆளுநராக இருந்தபோது கவர்னர் -** ஜெனரல் ஹே டிங் பிரபு (Lord Francis Rawdon Hastings, 1813-1826)வுடன் **இணக்கமா**ன தொடர்பு கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து முதல் பர்மியப் போரில் (1824-1826) பங்கேற்றார். மன்றோ இங்கிலாந்தின் போர்பார் கவுண்டி (Forfar County)யின் பரோனட் (Baronet) ஆக்கப்பட்டார். மன்றோவின் பெயர் கவர்னர் - ஜெனரல் பதவிக்குப் பரிசீலிக்கப்பட்டது. தாம மன்றோ புகழின் உச்சியில் இருந்த போது ஆந்திராவில் ஒப்புவிக்கப்பட்ட மாவட்டங்களில் (Ceded Districts) சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கையில் கர்னால் மாவட்டம் பட்டிகொண்டாவில் காலரா நோய்க்குப் பலியானார் (1827 ஜூலை). சென்னை மக்கள் நன்கொடை வசூலித்து மன்றோவுக்கு தீவுத் திடலில் குதிரை வீரர் சிலை (Equestrian Statue) எழுப்பித் தங்களது நன்றிக் கடனை நிரந்தரமாகத் தெரிவித்துக் கொண்டனர். இந்த சிலை சாண்டரே (Chanterey) என்ற சிற்பியால் வடிவமைக்கப்பட்டது.

5.8 மதிப்பீடு மக்களின் தந்தை

தாம மன்றோ போர் வீரராகத் தனது வாழ்க்கையைத் துவங்கி அரசியல் அறிஞராக, நிர்வாக விவேகியாக, மக்களின் தந்தை யாக மலர்ந்தார். மன்றோ மன்தவ ரிஷி' என்று போற்றப்பட்டார். அவர் போர்களில் பங்கேற்றதைவிட மக்களின் முன்னேற்றத்துக்காக மேற்கொண்ட வேளாண்மை, நீதித்துறை,

காவல்துறை, சிறைத் துறை, உள்ளாட்சி முறை, கல்வித்துறை சீர்திருத்தங்கள் நிலையானவை; நினைவில் நிற்கக் கூடியவை. மன்றோவின் ரயத்துவாரி முறை தென்னிந்திய கிராமங்களின் **பாரம்பரியத்**தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறுகிறார் ஜான் கே (John Keay). போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் சென்னை ராஜதானி முழுவதும் விரிவான பயணம் மேற்கொண்டு தமிழர்களின் வாழ்க்கை முறையையும், பாரம்பரிய பஞ்சாயத்து முறையையும், பண்பாட்டையும் பற்றி அறிந்து கொள்வதில் பேரார்வம் காட்டினார். நீலகிரியை நேசித்தார். முழு ஈடுபாட்டுடன் நிறைவேற்ற முடியாத எந்தப் பதவியையும் மன்றோ ஏற்றுக் கொள்ளவில்லை. **முற்போக்கு சிந்தனையாளர்**

தாம மன்றோ ஒரு முற்போக்கு சிந்தனையாளர். அவரது கல்விக் கருத்துக்கள் நவீன உலகின் பிரதிபலிப்பு. கல்விக்காக செலவிடப்படும் அரசாங்கப் பணம் வருங்கால சந்ததியினரின் வளர்ச்சிக்காக செய்யப்படும் முதலீடு என்று கருதினார் மன்றோ. மக்களை நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்றார். அதிகாரத்தை மக்களோடு பகிர்ந்து கொண்டால்தான் மக்கள் நலத் திட்டங்கள் வெற்றி பெறும்; சுய நம்பிக்கையும், சுயபலமும், சுயமரியாதையும் வெளிப்படும் என்று கூறினார். அரசுப் பணி இந்தியமயமாக வேண்டும் என்று கருதினார். ஆங்கிலேயர் இந்தியாவில் பின்பற்றும் ஆதிக்கக் கொள்கையை பிரிட்டனைக் கைப்பற்றிய ரோமானியர் மே**ற்கொண்டிருந்தால்** ஆங்கிலேயர் 'சிறுமதி படைத்த, **ஏமாற்றுக்கார, நாணயமற்ற இனமாக** மாறியிருப்பர் என்று கூறி பிரிட்டிஷ் ஆட்சியின் நோக்கம் மக்களை சுயாட்சிக்குத் தயார் செய்து விட்டு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்பதாக இருக்க வேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்தார் (His Minute of Dec.31, 1824). மக்கள் மூட நம்பிக்கைகளையும், பொல்லாங்குகளையும், வாழ்க்கைக்குப் பயன்படாத **எண்ணங்களையு**ம் விட்டொழிக்க வேண்டும் என்றார் மன்றோ. **குணக்குன்று**

தாம மன்றோ ஒரு குணக் குன்று. நற்குணங்களின் மொத்த உருவம் அவர். பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர் பின்வரும் மன்றோவின் திறமைகளையும் **குணங்களை**யும் பட்டியலிட்டுள்ளார். கற்றறிவு, தன்னடக்கம், விவேகம், கற்பனைத் திறன், இந்தியர் மீது இரக்கம், வீரம், நிர்வாகத் திறன், உறுதியான உள்ளம், சுய சிந்தனை, ஈகை, வாய்மை, எளிமை, நேர்மை, நடைமுறை நடத்தை.... மாபெரும் மனிதர்

பிரிட்டிஷ் அதிகாரிகளில் மிகவும் மரியாதைக்குரியவர் மன்றோ என்ற முடிவுக்கு வருகிறார் கே.ஜா. தாம மன்றோவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜே.பிராட்ஷா (J.Bradshaw) மன்றோ பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஊழியர்களுள் மிகப் பெரிய மனிதர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய வரலாற்றை

எழுதிய நேரு இரண்டு இடங்களில் மன்றோ பிரிட்டிஷ் ஆதிக்க ஆட்சிக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்களை விரிவாக மேற்கோள் காட்டியுள்ளார்.

6. மதிப்பீ டு

**தற்காலத் தமிழ் நாடு உருவாவதற்கா**ன அடித்தளம் ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் அமைக்கப்பட்டது. நவீனத் தமிழ் நாட்டுக்குத் **தேவையான பொருளாதார** வளர்ச்சி மற்றும் போக்குவரத்து, தொலைத் தொடர்பு போன்ற உள்கட்டுமான **வசதிகள் கம்பெனி நிர்வாகத்தின் விளைவாக உருப்பெற்றன. இவையாவும் கம்பெனியின்** சுய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டவை. எனினும், இந்த நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் **பிற்கால வளர்ச்சிக்கு முன்மாதிரிகளாகப் பய**ன்பட்டன. இவற்றின் மூலம் கம்பெனி நவீன **அறிவியல் தொழில்நுட்ப சாதனைகளைத்** தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தது கம்பெனி. குறிப்பாக, தமிழ் நாடு தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக சர் தாம மன்றோ மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகள் நிலையாக நினைவு **கூறத்தக்கவை.**